

# தமிழ்க்கனலி

## தமிழ்மொழித்திறன் - 1

(2024 - 2025 ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

முதலாமாண்டு - முதற்பருவம் - 24UTL101


தொகுப்பாசிரியர்

முனைவர் க.தனலட்சுமி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி – 642 001


தமிழ்க்கனலி


தமிழ்க்கனலி

தமிழ்மொழித்திறன் - 1

(2024 - 2025 ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

முதலாமாண்டு - முதற்பருவம் - 24UTL101


Scan Me


நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 05
☎ 044 - 26251968, 26253410,
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

ISBN 978-81-2344-640-0
Code No. A 5046 ₹



Scanned with CamScanner

அலகு - 2 கால அளவு 15 மணி 24UTL1O1

| | | | |
|---|---|---|---|
| 3. | முனைவர் ஆ.மகாலட்சுமி | நீரே! என் அடைக்கலம் | சரணாகதி |
| 4. | முனைவர் வஞ்சி.கருப்புசாமி | கொங்கு நாட்டுப்புற மானிடவியல் பண்பாடு | பண்பாடு |
| **வ. எண்** | **ஆசிரியர் / நூல்** | **கவிதைத் தலைப்புகள்** | **விழுமியங்கள்** |
| 1. | கா.வாசுதேவன் | தமிழ் இலக்கிய வரலாறு | இலக்கிய அறிவு |
| 2. | கா.வாசுதேவன் | தமிழ் இலக்கணம் - ஓர் அறிமுகம் | இலக்கண அறிவு |

## முதற்பருவம் - மாதிரித்தேர்வு - (செய்யுள், இலக்கணம்)

அலகு - 3 கால அளவு 15 மணி

| வ. எண் | ஆசிரியர்கள் | கவிதைத் தலைப்புகள் | விழுமியங்கள் |
|---|---|---|---|
| 11. | மயில்சாமி அண்ணாதுரை | அறிவியல் ஆன்மீகம் | அறிவியல் |
| 12. | சுகிர்தராணி | இயற்கையின் பேரூற்று | பெண்ணியம் |
| 13. | சொ.சேதுபதி | புத்தகம் என்பது புத்தகம் மட்டுமல்ல... | கற்றல் |
| 14. | மலர்மகன் | வெள்ளைத்தேனே | இயற்கை |
| 15. | காசி ஆனந்தன் | காத்திருப்பு | நாட்டுப்பற்று |
| 16. | ம.அ.சந்திரன் | தவம் | அயலகம் |
| 17. | சல்மா | சுவாசம் | பெண்ணியம் |
| 18. | ஜே.மஞ்சுளாதேவி | உழுத்தி | பெண்ணியம் |
| 19. | சக்தி ஜோதி | பறவையின் குரல் | இயற்கை |
| 20. | புன்னகை பூ ஜெயக்குமார் | ரௌத்திரம் | இயற்கை |
| **வ. எண்** | **இலக்கணம்** | | **விழுமியங்கள்** |
| 1. | **வல்லினம் மிகா இடங்கள்** | | **இலக்கணம்** |



## முதற்பருவம் - மாதிரித்தேர்வு - (உரைநடை, இலக்கிய வரலாறு)

அலகு - 4 கால அளவு (15) மணி

| வ. எண் | ஆசிரியர்கள் | உரைநடைத் தலைப்புகள் | விழுமியங்கள் |
|---|---|---|---|
| 5. | முனைவர் இரா.விஷ்ணுபிரியா | உதயணகுமார காவியம் காட்டும் வாழ்வியல் நிகழ்வுகள் | காப்பியம் |
| 6. | முனைவர் த.கீதாஞ்சலி | அம்பிகாவதி கோவையில் அகப்பொருள் மரபுகள் | சிற்றிலக்கியம் |
| 7. | முனைவர் த.பரமேஸ்வரி | உளப் பகுப்பாய்வு நோக்கில் பிரமிள் சிறுகதைகள் | உளப் பகுப்பாய்வு |
| 8. | இயகோகா சுப்பிரமணியம் | பயண உண(ர்)வுகள் | பயணம் |
| **வ. எண்** | **ஆசிரியர் / நூல்** | **தலைப்புகள்** | **விழுமியங்கள்** |
| 1. | கா.வாசுதேவன் | உரைநடைத் தமிழ் | உரைநடை வரலாறு |
| 2. | கா.வாசுதேவன் | தமிழில் சிறுகதை | சிறுகதை அறிவு |

## (சிறுகதைகள், படைப்பாக்கத்திறன்)

அலகு - 5 கால அளவு 15 மணி

| வ. எண் | ஆசிரியர்கள் | தலைப்புகள் | விழுமியங்கள் |
|---|---|---|---|
| 1. | வ.வே.சு. ஐயர் | குளத்தங்கரை அரசமரம் | அக உணர்வு |
| 2. | மா.நடராசன் | மயிலைமாடு | கால்நடை |
| 3. | சுப்ரபாரதிமணியம் | நவீனம் | நவீனம் |
| 4. | எஸ்.இராமகிருஷ்ணன் | வாழ்வியல் தேவை | பெண்ணியம் |
| 5. | கனலி விஜயலட்சுமி | மகடு முன்னிலை | பெண்ணியம் |
| 6. | கே.எம்.சண்முகம் | காப்பான் | சூழலியல் |
| **வ. எண்** | **படைப்பாக்கத்திறன் & பயிற்சி ஏடு** | | **விழுமியங்கள்** |
| 1. | சிறுகதை எழுதுதல், கவிதை எழுதுதல் | | படைப்பாக்கம் |
| 2. | பயிற்சி ஏடு | | |

Scanned with CamScanner

**இலக்கணம்**

1. வல்லினம் மிகும் இடங்கள், வல்லினம் மிகா இடங்கள் 56

**உரைநடை**

1. சங்கப் பாடல்களில் பெண்பாற் புலவர்களின் சான்றாண்மை - முனைவர் பே.மஹேஸ்வரி 65
2. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் கல்விச் சிந்தனைகள் - முனைவர் பா.அருள்ஜோதி 74
3. நீரே! என் அடைக்கலம் - முனைவர் ஆ.மகாலட்சுமி 82
4. கொங்கு நாட்டுப்புற மானிடவியல் பண்பாடு - முனைவர் வஞ்சி கருப்புசாமி 88
5. உதயணகுமார காவியம் உணர்த்தும் வாழ்வியல் நிகழ்வுகள் - முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா 100
6. அம்பிகாபதி கோவையில் அகப்பொருள் மரபுகள் - முனைவர் த.கீதாஞ்சலி 109
7. உளப்பகுப்பாய்வு நோக்கில் பிரமிள் சிறுகதைகள் - முனைவர் த.பரமேசுவரி 115
8. பயண உண(ர்)வுகள் - இயகோகா சுப்பிரமணியம் 121

**இலக்கிய வரலாறு**

1. தமிழ் இலக்கணம் - ஓர் அறிமுகம் 128
2. தமிழில் புதுக்கவிதை 135
3. தமிழில் சிறுகதை 149
4. உரைநடைத்தமிழ் 160

**சிறுகதைகள்**

1. குளத்தங்கரை அரசமரம் - வ.வே.சு. ஐயர் 177
2. மயிலை மாடு - மா.நடராசன் 182
3. வாழ்வின் தேவை - எஸ்.இராம கிருஷ்ணன் 189
4. நவீனம் - சுப்ரபாரதிமணியன் 197
5. மகடூஉ முன்னிலை - கனலி விஜயலட்சுமி 204
6. காப்பான் - கே.எம். சண்முகம் 220


Scanned with CamScanner

என்பதற்கேற்ப நன் ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் இவற்றைப் பேண துறவு வாழ்க்கையை உதயணன் மேற்கொள்கின்றான். அரசனுடைய தேவிமாரும், ஒப்பற்ற அமைச்சர்களும் தருமவீரர் என்னும் முனிவர் உறையும் பொழிலை அடைந்து அவரது திருவடிகளை வணங்கி முடிவில்லாத பேரின்ப வாழ்வை உதயணன் அடைந்தனன். தேவிமாரும், அமைச்சர்களும் நோன்பு செய்து தேவலோகத்தில் பிறப்பெய்தி, தத்தம் தகுதிக்கியன்ற இன்ப வாழ்வைப் பெற்றனர் எனலாம்.

இவ்வுலகில் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை எனப் பல ஆசைகள் இருப்பினும் ஒவ்வொருவரின் மனதிலும் சில ஆசைகள் ஏற்படுவதுண்டு. மனதில் தோன்றும் எண்ணமே ஆசைக்கு அடிப்படையாகின்றது. எல்லோரும் ஆசையின்றி வாழ வேண்டும் என ஆசைப்பட்டுக் கொண்டவர் புத்தர். அவ்வகையில் உதயணனின் வாழ்வில் காதல், ஊடல், கூடல் எனப் பலவும் நிகழ்கின்றது. ஒருவன் பல கலைகளைக் கற்றுணர்ந்து செல்வச் செழிப்பில் மூழ்கினாலும், இறுதிக்காலத்தில் தன்னோடு நிலைத்து நிற்பது எதுவுமில்லை என்பதை உணர்த்தும் கதாப்பாத்திரமாக உதயணனின் படைப்பு அமைகின்றது என்பதை விளக்கும் வகையில் இக்காவியம் இடம் பெறுகின்றது.



# 6. அம்பிகாபதி கோவையில் அகப்பொருள் மரபுகள்

- முனைவர் த.கீதாஞ்சலி

புதிய இலக்கிய வகைகளுக்கும், வடிவங்களுக்கும் இடங்கொடுத்துத் தன்னை வளப்படுத்திக் கொண்ட மொழி தமிழ். தமிழ் இலக்கிய வரலாற்றில் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் எனும் பாகுபாடு அண்மைகாலத்தில் தோன்றியது. அளவால் விரிந்து, மக்களுடைய வாழ்க்கையை அடையாளப்படுத்தி, அவர்களை நெறிப்படுத்தும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் எனப்பட்டன. அளவால் குறைந்து கற்பனை மிகுதியாக, தெய்வங்களையும் செல்வர்களையும் மக்களையும் தலைவர்களாகக்கொண்டு படைக்கப்பட்டவை சிற்றிலக்கியங்கள் எனப்பட்டன. சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், வச்சணந்தி மாலை ஆகிய நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. சிற்றிலக்கியங்கள் 'பிரபந்தங்கள்' எனும் வடமொழிச் சொல்லால் அழைக்கப்படுகின்றன. இவற்றைத் தொண்ணூற்றாறு வகையாகப் பிரிப்பர். சிற்றிலக்கியங்களில் அந்தாதி, தூது, உலா, கோவை, கலம்பகம், பரணி, பிள்ளைத்தமிழ், பள்ளு, குறவஞ்சி, அம்மானை போன்ற வகைகள் குறிப்பிடத்தக்கன.

## கோவை

கோவை என்பது கோர்த்தல், ஒழுங்குபட தொடுத்தல் என்று பொருள்படும். அகப்பொருள் இலக்கணத்தைத் தழுவி ஐந்திணையில் களவு, கற்பினுக்குரிய சொற்களையுடையதாய், கட்டளைக்கலித்துறை யாப்பில் நானூறு பாடல்களால் செய்யப்படுவது கோவை என்னும் இலக்கியத்தின் இலக்கணமாகும். ஐந்திணைக்குரிய நானூறு துறைகளும் அமைய பாடப்பெற்ற கோவை இலக்கியங்கள் ஐந்திணைக் கோவை என்றும் அகப்பொருட் கோவை என்றும் பெயர் பெற்று விளங்குகின்றன. எல்லாத் துறைகளும் வராமல் ஒரே துறையில் மட்டுமே வருவனவாக, செய்யுள் அமைந்திருப்பதை ஒரு துறைக்கோவை என்பர். கோவை சிற்றிலக்கியத்தில் காலத்தால் முற்பட்டது. நின்றசீர் நெடுமாறன் என்னும் பாண்டியன் அரிகேசரி மாறவர்மனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு பாண்டியன் காலத்தில் எழுந்தது பாண்டிக்கோவை ஆகும். இவன்காலம் கி.பி. 650. தமிழில் முதன்முதல் தோன்றிய கோவை இதுவேயாகும். தலைவன், தலைவி, பாங்கன்,

Scanned with CamScanner

தோழி, பாணன், செவிலி, ஊரவர், அயலவர் ஆகிய கதைமாந்தர்களுடன் ஐவகை நிலத்திலும் கதை நிகழ்வதாக வகுத்து, நிகழ்ச்சிகளை நாடகப்போக்கில் வழங்கும் கோவை நூல்களை நாடகக் கோவை நூல்கள் எனலாம்.

இக்கோவை நூல்களில் தலைச்சிறந்ததெனப் பாராட்டப்படுவது மாணிக்கவாசகர் அருளிய திருச்சிற்றம்பலக் கோவையென்னும் திருக்கோவை. அதனை ஒப்ப எழுந்த கோவை நூல்கள் தஞ்சைவாணன் கோவை. கோடீச்சுரக்கோவை, திருவாரூர் கோவை, திருவெங்கைக் கோவை முதலியன ஆகும்.

## அம்பிகாபதி கோவை

அம்பிகாபதி கோவை 564 செய்யுட்களைக் கொண்டு சொல்லணி பொருளணி முதலிய அணிகள் யாவும் அமைத்துப் பாடப்பெற்ற நூலாகும். மற்றய கோவை நூல்களைப் போன்று பாட்டுடைத் தலைவராகக் கடவுள், அரசர், வள்ளல் முதலியோரைக் கொண்டு பாடப்பெறாமல் பொது நிலங்கூறி, அந்நிலத்தில் வரும் ஒரு தலைவனையும் தலைவியையும் குறித்துப் பாடப்பெற்றதாகும். இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் இதுவென அறிஞர்கள் ஊகித்தே உரைக்கின்றனர்.

அம்பிகாபதி என்னும் பெயருடைய 'சௌந்தரிய லகரி'யைத் தமிழில் பாடிய வீரைக்கவிராச பண்டிதர் மகன் வீரை அம்பிகாபதி என்பவர் ஒருவரும். தண்டியலங்கார நூல் செய்த தண்டியாசிரியர் தந்தையார் அம்பிகாபதி என்பவர் ஒருவரும் ஆக இருவர் உள்ளனர். அவர்களில் ஒருவராக இருத்தல் கூடுமோ என்ற ஐயப்பாடும் உள்ளது.

## கம்பரின் மகன் அம்பிகாபதி

ஒன்பதாம் நூற்றாண்டில் குலோத்துங்கச் சோழனின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர் கவிச்சக்கரவர்த்தி கம்பராவார். இவரின் மகன்தான் அம்பிகாபதி. குலோத்துங்க சோழனின் குடும்பத்து இளவரசிதான் அமராவதி. அந்தக் காலத்தில் ஆசிரியரின் வீடுகளுக்குச் சென்று கல்வி கற்பது வழக்கமாக இருந்துள்ளது. கல்வியில் சிறந்து விளங்கிய கம்பரின் வீட்டுக்குத் தன் மகள் அமராவதியைக் கற்றிட சோழ மன்னன் அனுப்பி வைத்தான். அமராவதி நாள்தோறும் கல்வி கற்க கம்பர் வீட்டுக்குச் சென்று வருவாள். ஒரு நாள் கம்பர் வெளியூர் சென்றுவிட்ட நிலையில், வீட்டில் இருந்த கம்பரின் மகன் அம்பிகாபதி அமராவதிக்குக் கல்வி கற்றுக் கொடுத்துள்ளான். அப்போது அம்பிகாபதியிடம் காணப்பட்ட திறன் அமராவதியை ஈர்த்திருக்க



வேண்டும். அதுபோல அம்பிகாபதிக்கும் அமராவதி மீது விருப்பம் ஏற்படுகிறது. இருவருக்கும் இடையில் காதல் மலர்கிறது. ஒரு நாள் கன்னிமாடத்தில் நின்றிருந்த அமராவதியின் பார்வையில் அதன் வழியாகச் சென்ற அம்பிகாபதி தென்படுகிறான். அம்பிகாபதியும் தன் கவித்திறத்தால் அவளைப் பார்த்ததும் வர்ணித்துப் பாடலாகப் பாடிவிடுகிறான். இவர்களுக்குள் நடக்கும் இந்த நிகழ்வை மன்னன் கவனித்துவிட, சந்தேகம் வலுக்கிறது. இந்த நிலையில், ஒருநாள் அரண்மனையில் புலவர்களை அழைத்துச் சிறப்பித்த மன்னன் அவர்களுக்கு விருந்து படைக்கிறான். இந்த விருந்தில் கம்பரும் அவரது மகனும் அழைக்கப் பட்டிருந்தனர். அப்போது மன்னன் தன் மகளான அமராவதியை புலவர்களுக்குப் பரிமாறி உபசரிக்கும்படி சொல்கிறான்.

அமராவதி உணவு பரிமாறும் காட்சி அம்பிகாபதியை வெகுவாக ஈர்த்துக் கவிதை ஒன்றைப் பாடுகின்றான். இதைக்கேட்ட மன்னனுக்குப் பொருள் புரிந்தால் என்ன நடக்குமோ என்று துடித்துப்போன கம்பர், தெருவில் கொட்டிக் கிழங்கைக் கூவி விற்றுச் செல்லும் பெண்ணைப் பற்றி அம்பிகாபதி கூறியதைப்போல் பொருள் கொள்ளும்படி அடுத்த இரண்டடிகளைப் பாடுகிறார். ஆனாலும் பிரச்சனைக்குத் தீர்வுகான ஒட்டக்கூத்தரிடம் மன்னன் ஆலோசனை கேட்கிறான்.

அந்தக் காலகட்டத்தில் கம்பனுக்கும் ஒட்டக்கூத்தருக்கும் இணக்கமில்லாத சூழல் இருந்தது. ஒருநாள் அரசபையில் புலவர் பெருமக்கள் கூடிய அரங்கில் சிற்றின்பம் தவிர்த்து நூறு பாடல்களை அம்பிகாபதி பாடிவிட்டால் அமராவதியை மணக்கலாம், தவறினால் மரணதண்டனை அளிக்கப்படும் என்று மன்னன் அறிவித்தான். போட்டி தொடங்குகிறது. திரை மறைவில் இருந்த அமராவதி ஒவ்வொரு பாடலின் போதும் ஒரு மலரை எடுத்து இடம்மாற்றி வைத்து எண்ணிக்கையை உறுதிபடுத்துகிறாள். காப்புப் பாடலுடன் சேர்த்து நூறு பாடல்கள் முடிந்துவிட்டதாகத் தவறுதலாக எண்ணி திரையை விலக்கி எட்டிப்பார்க்கிறாள். அமராவதியைப் பார்த்த அம்பிகாபதியும் மகிழ்ச்சியில் அவளது அழகை வர்ணித்து இன்பச் சுவையில் பாடிவிடுகிறான். நூறாவது பாடல் இன்பச்சுவையில் பாடிவிட்டதால் போட்டியின் நிபந்தனையை மீறியதாக ஒட்டக்கூத்தர் விளக்கமளிக்கிறார். ஏற்கனவே திட்டமிட்டதுபோல அம்பிகாபதி கொலை களத்துக்குக் கொண்டுச் செல்லப்பட்டான். மரண தண்டனையும் நிறைவேற்றப்பட்டது. தன்னால்தான் அம்பிகாபதிக்கு இப்படியொரு நிலை ஏற்பட்டுவிட்டது எனக் கருதி அமராவதி அவனின் உடல்மீது விழுந்து அழுது உயிரை மாய்த்துக் கொள்கிறாள்.

Scanned with CamScanner

அம்பிகாபதி பாடிய இக்கோவை 'பல்துறைக் காரிகை' எ பெயரால் அழைக்கப்படுகிறது. அந்த அம்பிகாபதியே இக்கோ பாடியவர் என்றும் கூறுவர். அம்பிகாபதி கோவை எனும் இ முதன்முதல் 1899-இல் வெளிவந்துள்ளது. அதில் 'கவிச்சக்கரவர் யாகிய கம்பர் குமாரர் அம்பிகாபதி இயற்றிய அம்பிகாபதிக் கோவை என்றே குறிக்கப்பெற்றுள்ளது.

## அம்பிகாபதி கோவையில் அகப்பொருள் மரபுகள்

அம்பிகாபதி கோவையிலமைந்த பொருள் தொடர் சுருக்கமாக இனிக் காணலாம். வேட்டைமேற் சென்ற இளங்கா யொருவன் ஒரு பொழிலகத்தே போய் மலர்க்கொய்து நி மங்கையொருத்தியைக் கண்டு காதல் கொள்கிறான். இது கைக்கிளை இதனை ஒருதலை காமமென்றும் கூறுதலுண்டு.

**'திருவோ வரையுறை தெய்வங்கொ லோதெண் திரையமுதின்**
**உருவோ வளர்கொல்லி யோவிய மோவுயர் வானிடையில்**
**வருவோர் சிலவிஞ் சையர் மகளோவன்றி மானிடமோ.'**
(பா.3)

திருமகளோ? மலையரமகளோ? நீரரமகளோ? கொல்லிப்பாவையோ மானிடப் பெண்ணோ? என்று ஐயுற்று அவள் அழகால் ஈர்க்கப்பட்டு காதல் கொள்ளுகிறான்.

தன்மீது அவளுக்கும் காதல் உண்டு என்பதைக் குறிப்பாலுணர்ந்து இணைகிறான். இதை இயற்கைப்புணர்ச்சி என்பர். ஊழ்வினை கூட்டுவிக்கக் கூடும் புணர்ச்சி ஆதலின் இப்பெயர் பெற்றது. இதனை தெய்வப்புணர்ச்சி என்பர். தம்மைக் கூட்டுவித்த ஊழ்வினையின் தன்மையைத் தலைவன்,

**'யாங்காணு மாவியொன் றாயிரு வேழு மெழு பிறப்பும்**
**நீங்கா நிலைபெற்ற நேயமுந் தந்து'**
(பா..11)

என ஏழேழுபிறவிக்கும் நீங்காத அன்பினைக் கொடுத்ததாகக் கூறி மகிழ்கிறான். மறுநாளும் அதே இடத்திற்குச் சென்று தலைவியைத் தேடி அவள் அங்கு வந்திருக்கக் கண்டு, பேசி மகிழ்ந்து பின் பிரிகிறான். இதனை இடந்தலைப்பாடு என்பர். பின் பாங்கனுடைய உதவியால் தலைவன் தலைவியை மீண்டும் கூடும் கூட்டமே பாங்கற் கூட்டமாகும். தலைவன் மேனி வாடியிருத்தலைக் கண்ட பாகன்,

**'தென்செய்த பண்ணின் திறந்தெரிந் தோதெய்வப் பாவலர்தாம்**
**முன்செய்த நூலின் முறைதெரிந் தோசெம் முகங் கருகிப்**
**பொன்செய்த மேனியும் புல்லென்று வாடிப் புலம்பவென்னோ'**
(பா.46)



என்று தவித்துப்போய்ப் பொலிவிழந்ததற்கான பொன்போன்ற நிறம் தற்போது புல்லென்று ஆன காரணத்தை அறிந்து தலைவியைத்தேடிக் கண்டு தலைவனுக்குத் தெரிவித்து மீண்டும் கூடுதல் நிகழ்கிறது. தலைவனைப் பிரிந்து ஆயத்தை அடைந்த தலைவியின் நிலையைச் சோதித்தறிந்த பாங்கி இருவர் காதலையும் உணர்கிறாள். இது பாங்கி மதியுடன்பாடாகும். தழை முதலியவற்றைக் கொண்டு வந்து தலைவன், தலைவிக்குக் கையுறையாகப் பாங்கியிடம் கொடுக்க, அவள் ஏற்க மறுக்கிறாள். பின்பு அவன் தன் காதல் மிகுதியால்,

**"சோலையில் வந்தபைந் தோகைநல் லீர்மன்று சூழ்மறுகில்**
**காலையில் வந்தும்மைக் காண்பது நான்கரி யோன்கடைந்த**
**வேலையில் வந்த விடமுண்ட நாதர் விளங்கியபொன்**
**மாலையும் வண்ணக் கிழியும்வெண் ணீறும் மடலுங்கொண்டே"**
(பா.121.)

என்று மடலேறத் துணிந்தமையைக் கூறுகிறான். கேட்டு அஞ்சிய தோழியைத் துணையாகக் கொண்டு தலைவன் தலைவியை மீண்டும் அடைகிறான். இது பாங்கியற் கூட்டமாகும். திணைப்புனங் காத்து வரும் தலைவியைப் பகல் நேரத்தில் தோழி உதவியால் தலைவன் பலமுறைவந்து காண்கிறான். இது பகற்குறி எனப்படும். இச்செறிக்கப் பெற்ற தலைவியை தலைவன் இரவிலே வந்து காண்கிறான். இது இரவுக்குறி எனப்படும். இதற்கிடையில் தலைவியிடத்துத் தோன்றிய மாறுபாடுகளைக் கண்ட தாய் முதலாயினோர் அவளைப் பேய் தீண்டியதென எண்ணி முருகனை வழிபட்டு வெறியாடத் தொடங்கவும் தோழி தலைவியை மணஞ்செய்து கொள்ளும்படி தலைவனை வற்புறுத்துகிறாள். இது வரைவு கடாதல் எனப்படும். இதனை,

**"முன்றிலு மன்னை மருங்கிலு மேயன்றி முன்னறியாக்**
**குன்றி லருங்குலக் கொம்பனை யாள்குல வாணுதலின்**
**மன்ற லரிந்த மறியின் குருதியின் மண்ணுமள்ளிச்**
**சென்றொரு வேலர்கை நீண்ட தீண்டவென் செய்தது தீவினையே"**
(பா.263)

என்று கூறப்படுகின்றது.

வீட்டின் முன்னிடத்தைத் தவிர, அப்பாலுள்ள இடங்களைக் கண்டறியாத பூங்கொம்புபோன்ற தலைவியினது சிறந்த ஒளி பொருந்திய நெற்றியில், வெறியாடலின் விழைவால் ஆட்டின் செந்நீர்த் தோய்ந்த மண் தீண்டும்படியாக என்ன தவற்றினைச் செய்துவிட்டது என்று களவிலுள்ள துன்பத்தைக் கூறித் தோழி, வரையுமாறு அவனுக்குக் குறிப்பாலுணர்த்துகிறாள்.

Scanned with CamScanner

இதற்கிடையில் தோழி மூலமாக, தலைவியின் காதல் நிலையை செவிலி முதலியோர் அறிகின்றனர். இது அறத்தொடு நிற்றல். தலைவியின் உறவினர், தலைவன் அவளை வரைதற்கு உடன்படாது போகின்றனர். அதனால் அவன் சுரத்தின் வழியே தன்னூர் நோக்கி தனியே அழைத்துச் சென்று விடுகிறான். இது உடன்போக்காகும். இடைவழியில் தலைவியைக் கண்டோர் அவள் நற்றாயின் துயரை எண்ணி வருந்திக் கூறுவதாக,

**"பேதைப் பருவங் கழிந்திலள் இன்னமும் பேணியதன்**
**காதற் கொழுநன் விழுமிய கேண்மையைக் காதலித்துப்**
**போதற் கரிய எரியழற் கானகம் போந்தஇந்த**
**மாதைப் பயந்த மடந்தையெவ் வாறுயிர் வாழ்ந்தனளே"**

(பா.381)

என்ற பாடல் அமைந்துள்ளது. சென்ற தலைவன் தன் மனையகத்தே தலைவியை மணஞ் செய்கிறான் இது தன்மனை வரைதல் எனப்படும். இருவரும் இன்புற்று இல்லறம் நடத்துகின்றனர். இது இல்வாழ்க்கை. பின்பு தலைவன் பரத்தை காரணமாகத் தலைவியைப் பிரிகிறான். கருவுற்ற தலைவிக்கு ஓர் ஆண்மகவு பிறக்க தலைவன் மீண்டு வருகிறான். இது பரத்தையற் பிரிவு எனப்படும். அதன்பின் காவற்பிரிவு, பகைதனிவினைப் பிரிவு, உற்றுழிப் பிரிவு போன்ற காரணத்தால் பிரிந்துசென்று பொருளீட்டி மீள்கிறான். இருவரும் இல்லறம் நடத்திய பின், முடிவில் துறவறம் மேற்கொள்கின்றனர். இது துறவறம். இவ்வாறாக அம்பிகாபதி கோவை நிறைவடைகிறது.

இந்நூலின் முடிபுப் பகுதியில் தலைவன் தலைவி ஆகியோரை உயர்ந்த தன்மையில் வைத்துச் சித்தரித்துக் காட்டி, முடிவில் காமஞ் சான்ற கடைகோட்காலை கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றலாகிய வீடுபேற்றின் நிமித்தம் கூறி முடித்திருப்பது சிறப்புக்குரியதாக அமைந்துள்ளது.

Scanned with CamScanner